பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 18 (3—12—68) செவ்வாய் ★ வெளியூர்: கார்த்திகை 19 (4—12—68) புதன் [இதழ்: 140

சேலம் உருக்காலை

டெல்லியின் மழுப்பல்?

புதுடில்லி, டிச. 3—

"நான்காவது திட்ட காலத்தில் இரும்பு-உருக்குஉற்பத்திக்கான திட்டங்கள் வகுக்குமாறு நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகள் வந்த பிறகுதான், நெய்வேலி - சேலம் பகுதியில் ஓர் உருக்காலை துவங்குவது குறித்து அரசு ஒரு முடிவுக்கு வர முடியும்"

என்று உருக்குத் துறைத் துணை அமைச்சர் பி.சி. சேத்தி, மாநிலங்கள் சபையில் தெரிவித்தார்.

அந்தமானில் டெல்லி அதிகாரியின் தர்பார்

கழகக் கொடியை அகற்றச் சொல்லிக் கெடுபிடி

தமிழைக் கேலிசெய்து தமிழ்த் தொழிலாளரைப் பழிவாங்குகிறாராம்

மாயாபந்தர் (அந்தமான்), டிச. 3—

அந்தமான் வட பகுதி பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிர்வாகப் பொறியரான எஸ். எல். மாலிக் என்பவர், ஏழைத் தமிழ்த் தொழிலாளர்களை வேண்டுமென்றே அரசியல் கண்ணோட்டத்துடன் பழிவாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்; :காரணம் ஏதுமின்றி அவர்கள்மீது கெடுபிடிகள் செய்துவருகிறார்; தமது அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்திவருகிறார். தமக்கு இல்லாத அதிகாரங்களையும் பயன்படுத்துகிறார்; அவர்கள் பேசும்போது தமிழ் மொழியையும் இழிவுபடுத்துகிறார்.

அந்தமான் தி.மு.க. செயலாளருக்கு அவர், கடந்த 27-ஆம் நாள் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், மாயா பந்தர் கடைத் தெருவில் சாலைக்கு வெகு தொலைவில் பறந்து கொண்டிருக்கும் தி.மு.க. கொடியை அகற்றும்படி தெரிவித்துள்ளாராம்.

அந்த இடத்தில் பொதுப் பணித் துறை வேலை எதுவும் நடைபெறவில்லை;. அந்தக் கொடி அங்கு பறப்பதனால் எவ்வித இடையூறும் இருக்கக் காரணமில்லை; இருந்தும் அவர், தமது அதிகாரத்தைக் காட்டி இவ்விதம் கடிதம் எழுதியுள்ளார்;

'கடிதம் கிடைத்த நான்கு நாட்களுக்குள் கொடியை அகற்றிவிட வேண்டும்' என்றும் அவர் தவணை விதித்துள்ளார்.

அந்தக் கொடி, 1964-ம் ஆண்டு முதல் அதே இடத்தில் பறந்து கொண்டிருக்கிறது.

அந்த இடம் எல்லா அரசியல் கட்சிகளும் பொதுக்கூட்டம் நடத்தும் இடமாகும். அங்கே இந்தக் கொடி பறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க ரெவினியூ துறையினருக்கே அதிகாரம் உண்டு; எனினும் அவர்கள் இன்றுவரை எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

மாயாபந்தர், தமிழர்களே பெருமளவில் வசிக்கும் பகுதியாகும். இந்தக் கொடியை அகற்றும்படிச் சொல்லுவது, அமைதி விரும்பும் தமிழ் மக்களிடையே பரபரப்பை உண்டுகண்ணியுள்ளது. எனவே, இந்தப் பிரச்சினையில் உடனடியாக நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும் என்றும், அந்த அதிகாரியை உடனடியாக மாற்றினால்தான் நிலைமை சீரடையும் என்றும் அந்தமான் தி.மு.க. செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாநில அரசைப் புறக்கணிக்கும் செயல்!

மதுரை, டிச. 3—

"இலங்கையில் தோட்டத் தொழிலாளராக இருப்பவர்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்; அகதிகளாகத் தாயகம் திரும்பும் அவர்களில் பலரும் தமிழகத்தில்தான் குடியேற நேரிடும்.

"இங்கிலையில் டில்லியில் இலங்கைத் தலைமையமைச்சர் டட்லி சேனநாயகாவுடன் அண்மையில் மத்திய அரசு பேச்சு நடத்தியபோது தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் அழைக்கப்படவில்லை.

"தமிழர் பிரச்சினையை விவாதிக்கும்போதுகூடத் தமிழக முதல்வரை தலைமையமைச்சா அழைக்கவில்லை.

"மாநில அரசை மத்திய அரசு அலட்சியப்படுத்துவதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்."

—கே. ஏ. மதியழகன்

ரிசர்வு பாங்கியில் அதிகப் பற்று

"கேரளம், அசாம், பீகார், ஒரிசா, இராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள், அனுமதிக்கப்பட்டதற்குமேல் அதிகமாக ரிசர்வ் பாங்கியிலிருந்து பணம் வாங்கியிருக்கின்றன"

என்று மக்களவையில், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில்

கள்ளுக்கடைகள் திறப்பு

குடிகெடுக்கும் மது அருந்தப் போட்டாபோட்டி

குடிசைவாசிகளும் தொழிலாளர்களும் முற்றுகை

பம்பாய், டிச. 3—

கடந்த 18 ஆண்டுகளுக்குப் பின் பம்பாயில் ஞாயிறு அன்று காலை கள்ளுக் கடைகள் திறக்கப்பட்டதும், ஆண்களும் பெண்களுமாய் ஏராளமானவர்கள், அக்கடைகளை முற்றுகையிடுவதுபோல் சூழ்ந்துகொண்டுவிட்டார்கள்; இவர்களில் பெரும்பாலோர் ஆலைத் தொழிலாளரும் குடிசை வாழ்வோருமாவர்.

நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சில இடங்களில் போலீசு உதவியை நாட வேண்டியிருந்ததாம்; மிகக் குறைவாகவே வழங்கப்பட்டதால் மதுபானம் விரைவில் தீர்ந்து போய் சில மணி நேரத்துக்குள் கடைகளை மூட நேரிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

விலை பற்றித் திட்டமான கொள்கை எதுவும் இல்லாததால், புட்டி ஒன்று ஒரு ரூபாய் முதல் ஒன்றரை ரூபாய் வரை விற்கப்பட்டதாம்.

மாநில அரசின் புதிய கொள்கையின் முடிவையடுத்து சுமார் 50 மதுக் கடைகள் திறக்கப்பட்டன.

[தமிழக அரசு பரிசுச் சீட்டு விற்பதாலேயே ஏழை மக்கள் பாதிக்கப்படுவதாகவும், சுரண்டப்படுவதாகவும் கதைக்கும் இங்குள்ள காங்கிரசுக்காரர்கள், அவர்கள் கட்சி ஆட்சியில் உள்ள பம்பாயில் குடிகெடுக்கும் மதுவை விற்கக் கடை திறக்கப்படுவது பற்றி என்ன கூறுவார்களோ!]

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் பெருந்தகை நமது அருமை அண்ணா அவர்கள், அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று திரும்பியதில் --- அவருடன் சென்ற அண்ணியார், செல்வன் பரிமளம், தோழர்கள் க. இராசாராம் எம்.பி., இரா. செழியன் எம்.பி., ஆகியோருக்கான செலவுகளைக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அண்ணா அவர்களும், டாக்டர் சதாசிவமும் சென்று வந்த செலவுகளையும், அண்ணா அவர்களின் சிகிச்சைக்காக அமெரிக்காவில் ஆன செலவுகளையும் அரசாங்கப் பொறுப்பில் செய்வதில் தவறில்லை; அதுதான் முறையென்றாலுங்கூட, அண்ணா அவர்களின் விருப்பத்திற்கேற்ப அந்தச் செலவுகளையும் கழகம், அரசுக்குத் தந்துவிடுவது என்ற முடிவின்பேரில் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

அண்ணா அவர்களுக்கும், உடன் சென்றவர்களுக்கும் ஆகியுள்ள செலவு முழுவதையும் ஏற்கத்தக்க அளவுக்குக் கழகத்தின் பொருளாதார நிலை இல்லை என்பதை அனைவரும் அறிவீர்கள். ஆகவே, அதற்கான தொகையினை இரண்டு மூன்று வாரங்களுக்குள் உங்களிடம் நிதியாகப் பெற்றுக் கழகச் சார்பில், 'அண்ணா சிகிச்சை நிதி' என்ற தலைப்பில் தனிக் கணக்கு வைத்து, உடனடியாக அரசாங்கத்திற்குக் கட்டிவிட விரும்புகிறேன்.

இந்த வேண்டுகோள் கண்டவுடன், கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், அமைப்புக்களும், துணை அமைப்புக்களும் உடனடியாகக் கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்களால் இயன்ற பொருளுதவி புரியுமாறு --- என்றுமுள்ள உரிமை அன்போடு --- அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்,

அன்பன்
மு. கருணாநிதி,
பொருளாளர், தி.மு.க.
தலைமை நிலையம்.

'அறிவகம்'
சென்னை-13.

அண்ணா சிகிச்சை நிதிக்கு முதல் காணிக்கை

அமைச்சர் நெடுஞ்செழியன் ரூ. 500 வழங்கினார்

சென்னை, டிச. 3—

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்கு முதல் காணிக்கையாகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது ஒரு திங்கள் ஊதியத்தை (ரூ. 500) வழங்கினார்.

'முரசொலி' காணிக்கை

கழகப் பொருளாளரின் வேண்டுகோளுக்கிணங்க அண்ணா அவர்கள் சிகிச்சை நிதிக்காக 'முரசொலி'யின் சார்பில் ரூ. 500 வழங்கப்பட்டுள்ளது.

'நம் நாடு' ஊழியர்கள் சார்பில்....

அறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக 'நம் நாடு' அலுவலக ஊழியர்கள் சார்பில் ரூ. 51 அளிக்கப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தியில் சரிவு?

அமெரிக்காவின் மதிப்பீடு

வாஷிங்டன், டிச. 3—

இந்தியாவின் அரிசி உற்பத்தி சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 7 சதவிகிதம் குறைவாக இருக்குமாம்.

சென்ற ஆண்டு உற்பத்தி 610 5 இலட்சம் டன்கள்; இந்த ஆண்டு 570 இலட்சம் டன்கள்தான் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

ஆயினும், ஆசியாவில் (இந்தியா, கம்யூனிஸ்டு நாடுகள் நீங்கலாக) அரிசி உற்பத்தி மிக அதிக அளவில் இருக்கும்; அதாவது, 1,810 இலட்சம் டன்களாக இருக்கும்.

கள்ளப் பயணம் செய்வோருக்கு அபராதம்

அதிகரிக்கப் புதிய சட்டம்

புதுடில்லி, டிச. 3—

இரயிலில் டிக்கெட்டின்றிப் பயணம் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை ரூ. 100 லிருந்து ரூ. 500-க்கு உயர்த்த வகைசெய்யும் மசோதா ஒன்றை மக்களவையில், இரயில்வே அமைச்சர் சி. எம். பூனச்சா கொண்டுவந்தார்.

அமைதியும் மகிழ்ச்சியும் பிறக்க அழகும் தூய்மையும் காப்போம்!

தலைநகர மக்கள் கடைபிடிக்க வேண்டிய ஐந்து கடமைகள்-வானொலியில் மேயர் வேண்டுகோள்

சென்னை, டிச. 2—

சென்னை மேயர் திரு. டி. வேலூர் நாராயணன் அவர்கள், நேற்று மாலை சென்னை வானொலி நிலையத்தில், 'நம் தலைநகரை அழகுபடுத்துவோம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை வருமாறு :—

மனிதனது கைகொண்டு புனையப் பெருத இயற்கை எழிலை அன்றையத் தமிழ் கூறும் நல்லுலகைச் சுற்றிக் கண்ட நக்கீரனார், 'கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பு' என்று திருமுருகாற்றுப் படையில் எழிலுறக் கூறினார்.

இந்த இயற்கை எழில் செறிந்து விளங்கிய அன்றையச் சென்னப்பட்டினம், நம் தலைமுறையிலேயே எவ்வளவு மாறுதல்களை அடைந்துள்ளது என்பதை எண்ணிப் பார்த்தால் நமக்கே பெரு வியப்பாக இருக்கின்றது.

முப்பதாண்டுகளுக்குமுன் சென்னை மாநகரின் சாலைகள் தார் பரப்பப்படாமல் இருந்திருக்கலாம்; நடைபாதைகள் அமைக்கப்படாமல் இருந்திருக்கலாம்; ஆனால் அன்றையச் சென்னை நகரின் சாலைகள் சுத்தமாக இருந்தன; சாலைகளின் இருமருங்கும் நிழல் தரும் மரங்கள் சோலைகளாகக் காட்சி தந்தன!

இன்றைய சென்னை மாநகரைப் பாருங்கள் -- எவ்வளவு மாற்றங்கள்! அம்மாற்றங்களில் பெருமை தருவன பல -- சிறுமை செய்வனவும் சில உள!

சாலைகளின் இருமருங்குமிருந்த பச்சை மரங்கள் இன்றில்லை; சாலைகளை அகலப்படுத்தும் அவசியம் ஏற்பட்டபோது வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களுக்குப் பதிலாக வேறு செடிகள் பயிரிடப்படுவதில்லை; இதனால், தோட்டம்சூழ் நகரமாக எழிலோடு காட்சி தந்த சென்னை நகரம், இன்று, பாலை நிலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட ஒரு குடியிருப்பு நகரமாகக் காண்கின்றது!

நம் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போல், நடைபாதைகளிலும், மேடு பள்ளங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையிலுள்ள நடைபாதைகளில் கோயில்கள்போல் காட்சி தரும் சிறு சிறு கட்டடங்கள் அன்றாடம் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இத்தகையச் சிறு கோயில்களை எழுப்புகின்றவர்களின் சுயநல நோக்கைப் புரிந்துகொள்ளாது நாமும் அவற்றை வரவேற்கின்றோம்.

சேரனும், சோழனும், பாண்டியனும் எழுப்பிய கலைக் கோயில்களில் பல இன்று கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன; தமிழர் நாகரிகத்தின் சின்னமாக விளங்கும் அக் கலைக்கூடங்களில் சில, பரிதாப நிலையில் இன்று இருக்கின்றன; ஆனால், இந்த நடைபாதைக் கோயில்கள் நாளும் நாளும் புதுப் புது வகையில் வளர்ந்தும், எண்ணிக்கையில் பெருகியும்வருகின்றன.

இவற்றோடு போட்டி போட்டுக்கொண்டு பண்டங்களைக் கூவி விற்போர் சிறு சிறு கடைகளை மனம்போன போக்கில் அமைத்துக்கொள்கின்றனர்.

நடைபாதைகளில் கோயில் கட்டிப் பிழைப்பு நடத்துவோருடனும், கடைகளை வைத்துப் பிழைப்போருடனும் போட்டி போட்டுக்கொண்டு பசுக்களையும், எருமைகளையும் நடைபாதையில் நிரந்தரமாக வைத்துப் பிழைப்போரும் அதிகம் பேராக உள்ளனர்!

நடைபாதைகளிலேயே குடிசைகளை அமைத்துக்கொண்டு குடும்பம் நடத்துவோரும் அதிக அளவில் உள்ளனர்.

நடைபாதைகளை இத்தகு கோயில் எனப்படும் தடைகளுக்கும், கூவி விற்போர் கடைகளுக்கும், மாட்டுத் தொழுவங்களுக்கும், குடிசைகளுக்கும் பறிகொடுத்துவிட்டு, பாதசாரிகள் நடுத் தெருவில் நடந்துசெல்ல வேண்டியதாகின்றது.

இந்த நிலையில் சாலைகளில் வண்டிப் போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் ஏன் ஏற்படாது?

தனியார் நிலங்களிலும், அரசாங்க நிலங்களிலும் ஆக்கிரமிப்புச் செய்து குடிசைகளை அமைத்துக் கொண்டு சாக்கடை வசதியும், சாலை வசதியும் இன்றிச் சுகாதாரச் சீர்கேடான சூழ்நிலையில் வாழும் மக்கள் ஏராளம்! பற்று நோய்களும், பரவு நோய்களும் வளர்கின்ற பண்ணைகளாகக் குடிசைப் பகுதிகள் உள்ளன!

ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள பூங்காக்களில் பல, இன்று நல்ல நிலையில் இல்லை; அவை, சமூக விரோதிகளின் ஆலோசனைக்கூடங்களாக இருந்துவருகின்றன! 'பூங்கா' என்ற பெயருக்கு அங்கு ஓரிரு செடிகள்தாம் உள்ளன! 'நமக்கென்ன' என்று கண்மூடிக் கொண்டு நாம் இருந்துவிடுவதால்தான், நம் நகரம் எழில் குன்றி அவல நிலைக்கு வந்துவிட்டது! இனியும் நாம் அந்த மனப்பான்மையுடன் இருந்தால், இந்த நகரின் தெருக்களிலெல்லாம் கோயில்கள் எனப்படும் தடைகளும், கடைகளும், மாட்டுத் தொழுவங்களும், குடிசைகளும் நிறைந்துவிடும்!

உடலில் நரம்புகள் பின்னிச் செல்வதுபோல் நம் நகரினூடே நெளிந்து செல்லும் கூவம் ஆறும், பக்கிங்காம் கால்வாயும் நகருக்கு எழில் கூட்டுதற்குப் பதில், அதன் எழிலைக் கெடுத்துக் கொண்டிருந்தன; இப்போது அந்த நிலையை மாற்றி -- அவற்றால் வரும் துர்நாற்றத்தைப் போக்கி -- அவற்றை நதி நீர்ப் போக்குவரத்திற்கு ஏற்றதாகச் செய்ய நம் தமிழ்நாட்டு அரசு விரிவான திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

வானொலி வாயிலாக உங்கள் அனைவருடனும் பேசும் வாய்ப்புக் கிட்டியதைப் பயன்படுத்திக் கொண்டு -- இந்த நகரின் முதற் குடிமகன் என்கின்ற முறையிலே நம் நகரை மீண்டும் எழில் பெறச் செய்வது எப்படி என்பது பற்றி எனது கருத்துக்களைத் தெரிவிக்க விழைகின்றேன். நம் நகரை அழகுபடுத்தும் முயற்சியில் உங்கள் ஒவ்வொருவரது மேலான ஒத்துழைப்பையும் நல்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னர் குறிப்பிட்ட நடைபாதைகளிலுள்ள கோயில்களையும், கடைகளையும், மாட்டுத் தொழுவங்களையும், குடிசைகளையும் அகற்றும் முயற்சியில் நான் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றேன். இம்முயற்சிக்குப் பொதுமக்களிடமிருந்து எனக்கு நல்லாதரவு கிடைத்தவண்ணமிருக்கின்றது. போலீசுத் துறையினரும் நல்ல ஒத்துழைப்பு அளித்துவருகின்றார்கள்.

'சமுதாயத்திற்கு நல்ல காரியத்தைச் செய்வதற்கும் துணிவு வேண்டும்' என்று அரசியலில் பழுத்த அனுபவம் உடைய மேதைகள் கூறியிருக்கிறார்கள்; அந்தத் துணிவு, இப்பிரச்சினையில் அதிகமாகத் தேவைப்படுவதை நான் உணருகிறேன்.

நடைபாதைகளில் கோயில்களும், கடைகளும், மாட்டுத் தொழுவங்களும், குடிசைகளும் அமைக்கப்படும்போது அவற்றிற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டாம் என்றும், முன்னமே அமைக்கப்பட்டுள்ளவற்றை அகற்றுவதில் மாநகராட்சியுடனும், போலீசுத் துறையுடனும் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நகரை எழில்படுத்தத் தடையாக உள்ள இவற்றை அகற்ற நீங்கள் ஒத்துழைத்தால், நகரை அழகுபடுத்தும் திட்டங்களை நாம மேற்கொள்ளலாம். அவற்றிற்கும் உங்கள் ஒத்துழைப்பே மிகவும் அவசியமாகும்.

நம் நகரை அழகுபடுத்துவது எப்படி --- அதற்கான திட்டங்கள் யாவை என்பவற்றை உங்களுடன் கலந்து பேச விழைகின்றேன்.

சாலை சந்திப்புகளிலுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் திடல்களில் சிலவற்றைச் சில ஆண்டுகளுக்கு முன்பு நகரிலுள்ள பெரு வணிக நிறுவனங்கள் ஏற்றுத் தம் சொந்தச் செலவில் அவற்றைப் பராமரித்துவந்தன; அவற்றில் தம் நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ள அவை அனுமதிக்கப்பட்டன. அந்த முறையை மீண்டும் புதுப்பித்துக்கொண்டு, நகரிலுள்ள எல்லாப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் திடல்களையும், பொது நிறுவனங்களும், சமூகச் சங்கங்களும் ஏற்று நல்லபடியாகப பராமரித்தல், நகரை அழகுபடுத்தும் முயற்சியில் முதற்படியாகும். சிறப்பான வகையில் பராமரிக்கப்படும் திடலுக்கு ஒரு சுழற்கேடயம் வழங்க ஏற்பாடு செய்கிறேன்.

சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களைப் பயிரிட சென்னை மாநகராட்சி தீவிரமாக ஈடுபட ஏற்

(3-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் 'அகம்' என்ற தமிழ்ச் சொல்

'தமிழகம்' என்றால் தரணிக்குத் தெரியாதா?

காங்கிரசார் புரிந்த துரோகம்--ஆதித்தனார் விளக்கம்

சென்னை, டிச. 2—

'அகம்' என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் வழங்குவதைச் சுட்டிக் காட்டி, 'தமிழ்நாடு' என்றால், தரணிக்குத் தெரியாதா?' என்று வினவினார், திரு. சி. பா. ஆதித்தனார்.

நேற்று நடந்த 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது :—

"இனி நாம், 'சென்னை இராஜ்யம்'--'மெட்ராஸ் ஸ்டேட்' என்று அழைக்கத் தேவையில்லை; 'தமிழ்நாடு' என்றே அழைக்கலாம்.

தமிழ்நாட்டுள்ளும், இந்தியாவிலும், உலகத்திலும் இன்று முதல் நாம், 'தமிழ்நாட்டினர்' என்ற பெயரையே பெற்றிருக்கிறோம்; அதனால் டில்லிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தனை ஆண்டுக்காலம் நமக்கு இந்தப் பெயர் மாற்றம் கிடைக்காததற்குக் காரணம் டில்லி அல்ல--இங்கேயுள்ள காமராசரும், பக்தவத்சலமும்தான் தடையாக இருந்தார்கள்!

தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு டில்லிக்கு அனுப்ப வேண்டியவர்கள் இங்கே இருப்பவர்கள்; அவர்கள் அனுப்பாததால்தான், இத்தனை ஆண்டுகள் தடையாக இருந்தது!

அப்போது அவர்கள், 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்யக் கூடாது என்பதற்கு என்ன காரணம் சொன்னார்கள்?— 'மெட்ராஸ்' என்றால்தான் புரியும்; 'தமிழ்நாடு' என்றால் யாருக்கும் தெரியாது---என்றார்கள்!

'மெட்ராஸ்' என்பதாவது நல்ல பெயரா? 'எம்.ஏ.டி.' 'மேட்' என்றால் பைத்தியம் என்று அர்த்தம்!

அதைவிடத் தமிழ்நாடு சிறந்த பெயர் அல்லவா? 'தமிழகம்' என்பது தூய தமிழ்ச் சொல் அல்லவா?

'அகம்' என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலேயர்கள் 'ஹோம்' என்று--'வீடு' என்னும் பொருளில் கூறுகின்றனர்.

பிரெஞ்சு மொழியிலும் 'அகம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது; ஆகவே, தமிழ்நாடு உலகத்துக்குத் தெரியாதா?

கடந்த சட்டமன்றக் கூட்டத்தில், 'தமிழ்நாடு' தீர்மானம் நிறைவேறியபோது சட்டமன்றம் உணர்ச்சிமிக்கதாக இருந்தது.

இந்தப் பெயர் மாற்றத் தீர்மானம் வந்தபோது பீர்முகம்மது ஆனந்தக் கண்ணீர் வடித்தார்!

ம. பொ. சி. அவர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு இருந்தார்; 'அவையின் சட்டவிதிகள் அனுமதிக்குமானால், அண்ணா அவர்களை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பேன்' என்று சொன்னார்.

அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' என்று சொல்ல — 230 உறுப்பினர்களும் ஒருமுகமாக 'வாழ்க' என்று முழக்கமிட்டார்கள். 1967 ஜூலை 18-ஆம் நாள் தீர்மானத்தை நிறைவேற்றினோம். தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் அது மறக்கமுடியாத நாளாகும்! தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் அது!

'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்று தமிழில் எழுதப்பட்டது. அரசாங்கப் பேருந்து வண்டிகளில் பொதுப்பணி அமைச்சர், 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று எழுதிய போது, அவரிடம் அதுபற்றிக் கேட்டேன்; 'தமிழ்நாடு' என்பது நாட்டுணர்வைக் குறிப்பது; தமிழகம் என்பதில் இன உணர்ச்சி எடுத்துக்காட்டப்படும் என்றார்.

இந்த நிகழ்ச்சி, சரித்திரத்தின் திருப்பு முனையாகும்! அந்த மகிழ்ச்சியைத்தான் நாம் விழாவாகக் கொண்டாடுகிறோம!"

தீமைகளை அகற்றினால்தான்!

இந்து மதம் தீண்டாமையையும், உயர்ந்தவர்கள் -- தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாட்டையும், அதில் இருக்கும் மற்ற எல்லாத் தீமைகளையும் அகற்றினால்தான் அதற்கு உரிமை என்று ஒன்று வர முடியும்!

—காந்தியார்

அறுசுவை உணவுக்குப் பஞ்சம் வருமா?

'அஞ்சத் தேவையில்லை' என்கின்றனர் நிபுணர்கள்

"தற்போது மேற்கு நாடுகளில் பெரும்பாலான உணவுப் பண்டங்கள், புட்டிகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன; காலம் செல்லச் செல்ல, உணவுப் பண்டங்களுக்குப் பதிலாக, 'உணவு மாத்திரை'கள் உட்கொள்ளும் நிலை ஏற்படுமோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது; ஆனால், உணவு மாத்திரைகளையே உணவாக உட்கொள்ளும் நிலை வராது; 2000-ஆம் ஆண்டிலும் சுவையான சூடான உணவுப் பண்டங்கள் கிடைக்கும்"

என்ற நிலையை, அண்மையில் ஜெர்மனியில் நடைபெற்ற அனைத்துநாட்டு உணவுக் கண்காட்சி தெளிவாக்கியிருக்கிறது.

எதிர்கால உணவு எப்படி அமைந்திருக்கும்? -- மனிதனின் புரதச் சத்துத் தேவையை நிறைவு செய்யும் வகையில் பெரும்பாலும் காய்கறிகளாகவே இருக்கும். 'சோயாபீன்' மொச்சைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'செயற்கை இறைச்சி' தற்போது மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது; ஆனால் இந்தச் செயற்கை இறைச்சி சுவை மிக்கதாக இருப்பதாகச் சொல்ல முடியாது; எனினும், இதில் சத்துக் குறைவில்லை.

எதிர்காலத்தில், கடலிலிருந்து கிடைக்கும் உணவு கணிசமாகப் பயன்படுத்தப்படும். இப்போது மீன்களுக்கு அடுத்ததாக நண்டு, ஆக்டோபஸ் ஆகியவை சுவையானதாக உட்கொள்ளப்படுகின்றன.

"உலகில் மக்கள் தொகைப் பெருக்க வேகத்தைக் கவனிக்கும்போது, ஐந்து பெருங் கடல்களிலிருந்தும் மீன் வகைகளைக் கணிசமாகப் பிடித்துப் பயன்படுத்த வேண்டும்" என்று உணவுச் சத்து நிபுணர்கள் கருதுகிறார்கள். இனிமேல் ஐரோப்பிய உணவு முறையும் மாறினால் வியப்படைவதற்கில்லை.

பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைக்கப்பட்ட பழங்கள், ஏற்கனவே தோலுரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட பழங்கள் இனி விற்பனைக்கு வரும்.

குளிர வைக்கப்பட்ட -- உலர்த்தப்பட்ட பழங்கள் பிரபலமடைந்து வருகின்றது. புட்டியைத் திறந்த பின்னரும் சிறிது காலம்வரை கெட்டுப் போகாத பழச்சாறுள்ள புட்டி ஒன்றினை மேற்கு ஜெர்மன். நிறுவனம் தயாரித்திருக்கிறது.

மறு பிறப்பெடுத்தது 'தமிழ்நாடு'!

தமிழ்ப் பகைவர்கள் ஆண்டதால் இவ்வளவு தாமதம்

மகிழ்ச்சி விழாவில் ம. பொ. சிவஞானம் உரை

சென்னையில் 1—12—68 அன்று நடந்த மகிழ்ச்சி விழாவில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையேற்று ஆற்றிய உரை, வருமாறு :—

"இந்த நாளில் ஒவ்வொரு தமிழனும் உள்ளம் பூரிக்கிறான்; உணர்ச்சிக் குமிழ்கள் அவன் நெஞ்ச ஊற்றிலிருந்து கொப்புளித்துவருகிறது.

இந்த நாள், நம்மை 'மதராசி'க் காரரென்று மற்றவர்கள் சொல்லிவந்ததை ஒழித்துக்கட்டும் நாள்! இனி நாம் 'மதராசி'க் காரர்கள் அல்லர் -- தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் -- தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்!

அமெரிக்காவிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பிய முதலமைச்சர் அண்ணா அவர்கள் முதன் முதலாகப் பேசுகின்ற வெற்றி பெற்ற நாள்! 'தமிழ்நாடு' எனும் பெயர் மாற்றம் கிடைத்ததைக் கொண்டாட இம்மகிழ்ச்சியைத் தெரிவிக்க நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

அண்ணாவின் உடல் நிலையைக் காப்பாற்ற மேற்கு கைகொடுத்தது!

தமிழகத்தின் உரிமையைக் காக்க வடக்கு கைகொடுத்தது!

இக்கூட்டம் 'தமிழ்நாடு பெயர் மாற்றம்' கிடைத்ததற்கு மகிழும் பொருட்டு மகிழ்பவர்கள் சார்பில் நடத்தப்படுகிறது; மனம் இருப்போர் கலந்துகொள்கின்றனர்; இது, மூன்றரைக் கோடித் தமிழ் மக்களின் சார்பில் நடத்தப்படுகிறது; காங்கிரசுத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டிருந்தால் இன்னும் இவ்விழாச் சிறப்பாக இருக்கும் -- நம் மகிழ்ச்சியும் இரட்டிப்பாயிருக்கும்!

இவ்விழாவில் கலந்துகொண்டு பெருமையடையும் பாக்கியம் அவர்களுக்கில்லை! 'என் தாத்தா இப்படிப்பட்ட அரிய விழாவில் கலந்துகொண்டார்' என்று தங்கள் பேரப்பிள்ளை சொல்லிப் பெருமையடையும் பேறு அவர்களுக்குக் கிடைக்கவில்லை!

இந்த நேரத்தில் மத்திய அரசுக்கும் சேர்த்தே இவ்விழாவைக் கொண்டாடுகிறோம்.

எத்தனையோ பிரச்சினைகளுக்கு முடிவு காண மத்திய அரசோடு தமிழக அரசு போராடிக்கொண்டிருக்கிறது; ஆனால், பெயர் மாற்றம் கேட்டபோது எந்தவிதமான மறுப்பும் கூறாமல் கொடுத்துவிட்டார்கள்; ஆதலால் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அண்ணா மறுபிறப்பு எடுத்துவந்ததுபோலத் 'தமிழ்நாடு'ம் மறுபிறப்பு எடுத்துவந்திருக்கிறது!

இங்கே டி. கே. சண்முகம் அவர்கள் பாடிய 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற பாட்டு விழாவுக்காகப் புனைந்து பாடப்பட்ட பாட்டல்ல; அல்லது தி. மு. க. கவிஞர்கள் எழுதிய பாட்டு அல்ல; வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்த விடுதலைப் பாசறையில் போர்க் கருவியாகப் பயன்பட்ட சுப்பிரமணிய பாரதியார் ஏக்கத்தைக் கொட்டி எழுதிய பாட்டு; 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்று சரித்திர ரீதியாகச் சொல்லுகிறார்!

இதயம் பூரித்துப் பொங்கிப் பாடினார்! அத்தகையவர் இறந்துவிட்டாலும், ஆவி வடிவத்தில் வந்து இவ்வரங்கத்திலிருந்து நம்மை வாழ்த்துவார்!

சங்க இலக்கியம், 'பாட்டும் தொகையும்' என்பார்கள்; அந்தப் பத்துப் பாட்டிலும் எட்டுத்தொகையிலும் 'தமிழகம்' என்றே இருக்கிறது.

சிலப்பதிகாரத்தில், 'தமிழ்நாடு' என்று இருக்கிறது. பாயிரம் பாடிய பனம்பாரனார், 'தமிழில் உலகம்' என்று கூறுகிறார். பனம்பாரனார் முதல் பாரதியார் வரை 2,000 ஆண்டுக்காலங்கள், அகம் -- நாடு -- உலகம் என்று மாறினாலும், முன்னால் உள்ள தமிழ் மாறாமல், தமிழகம் -- தமிழ்நாடு -- தமிழ் உலகம் என்று இருக்கிறது; ஆக, வால் மாறினாலும் இங்கு தலை மாறவில்லை!

'மதராஸ்' என்ற பெயர் கிடைத்தது ஆங்கிலேயர் காலத்தில் தான்; ஆந்திரம் -- கேரளம் -- தமிழகம் ஆகிய மூன்று நாடுகளையும் அவன் பொதுவாக்கி வைத்தான்; ஆனால், தமிழ்நாடு என்பதை அவன் மறைக்க விரும்பவில்லை.

மூன்று நாட்டையும் ஒன்றாக்கி வைப்பதற்காக, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று பெயர் வைத்தான்.

கிழக்கே ஒரிசா, கல்கத்தா ஆகியவற்றை இணைத்து, 'கல்கத்தா ஸ்டேட்' என்று பெயரிட்டான்.

மேற்கே சிந்து மொழி பேசுவோரையும் -- குசராத்தி பேசுவோரையும் -- மராட்டியம் பேசுபவரையும் ஒன்றாக்கி, 'பம்பாய் ஸ்டேட்' என்று பெயர் வைத்தான்; அதனால், இந்தியாவை 11 மாகாணங்களாகப் பிரித்தான் -- அவன் ஆளுவதற்கு வசதியாக!

அவன், நிறத்தாலும் அந்நியன் -- பிறந்த நிலத்தாலும் அந்நியன்! இருந்தாலும், மொழிக்கு மதிப்புக் கொடுத்தான்! அதனால், பஞ்சாபி மொழி பேசுவோர் நாட்டை 'பஞ்சாப்' என்றான்; குசராத்தி பேசுவோர் நாட்டை 'குசராத்' என்றுதான் அழைத்தான்; தமிழ்நாட்டை மட்டும் பிரிக்காமல் வெளியேறிவிட்டான்! பிரிக்கக்கூடிய நேரத்தில் வெளியேற்றப்பட்டான்!

அப்போது கேரளம் பிரிந்தது -- ஆந்திரம் பிரிந்தது -- தெலுங்கு பேசுவோன், தன் நாட்டிற்கு 'ஆந்திரம்' என்றே பெயர் வைத்துக்கொண்டான்!

ஆனால், வெட்கப்பட வேண்டிய ஒன்றைத் துக்கத்தோடு சொல்கிறேன்; தமிழன், 'தமிழ்நாடு' என்று பெயர் வேண்டாமென்றே தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்தான்!

வெள்ளையன் சொன்னால் கவலைப்படமாட்டோம்; நம் நாட்டவனே சொன்னால் இரத்தம் கொதிக்காதா? நாடி துடிக்காதா?

இக்கொடுமையிலிருந்து நாடு விடுபடச் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டோம்; மத்திய அரசும் ஒப்புக்கொண்டது; கதையும் முடிந்தது!

இப்படிச் சுலபமாகத் தீர்க்க வேண்டியிருந்த ஒரு பிரச்சினைக்காக, 1956-ல் பிப்ரவரி 20-ம் நாள் தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்குப் போராட்டம் நடத்த நேரிட்டது -- தமிழ்ப் பகைவர்கள் அரசாண்ட காரணத்தால்! 1956-ல் நாங்கள் போராட்டம் நடத்தும்போது, 'தட்சிணப் பிரதேசம்' என்றிருப்பது கூடாது; 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும்; தேவிகுளம், பீர்மேடு எங்களிடம் வரவேண்டும்' என்று முழக்கமிட்டோம்.

ஆனால், 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தை ஏற்கமாட்டோம் -- என்று சட்டமன்றத்தில் ஒரு மசோதாவால் முடிவு கட்டினார்கள்; போராட்டம் நடத்தினோம்; அந்தப் போராட்டத்தில் டி. கே. சண்முகம் உட்பட 1,200 பேர் கைதானார்கள். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களும் சண்முகத்திற்கு மாலை போட்டுச் சிறைக்கு அனுப்பினார்கள்.

அப்பொழுது நாங்கள் தி. மு. கழகத்துடன் மாறுபட்டிருந்தோம்--கருத்தில் வேறுபட்டிருந்தோம்; ஆனால், 'தமிழன்' என்ற உணர்ச்சி தமிழரசுக் கழகத்திற்கும் இருப்பதால், சட்டமன்றத்தில் இன்றைக்கு அமைச்சராக இருப்பவர்கள் அன்றைக்கு வெளிநடப்புச் செய்தார்கள்.

அந்த நேரத்தில் 1961 சனவரி 30, 31; பிப்ரவரி 1 ஆகிய மூன்று நாட்களில் எதிர்க்கட்சி இல்லாமல் காங்கிரசு அரசாங்கம் சட்டமன்றத்தை நடத்தியது; இந்த ஜனநாயக அசிங்கம், வேறு எந்த நாட்டிலும் நடந்ததில்லை!"

சென்னை 4-வது வட்ட அண்ணா மன்றம்

22—11—68-ல் சென்னை 4-வது வட்ட தி. மு. க. செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில், 4-வது வட்ட அண்ணா மன்றம் (12 பால அருணாசல செட்டி தெருவில்) அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; கீழ்க் கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர்: எஸ். கே. சண்முகம்; செயலாளர்: குழந்தைவேலு; துணைச் செயலாளர்: பஞ்சாட்சரம்; பொருளாளர்: ஜம்புலிங்கம்; மற்றும் 7 பேர் உறுப்பினர்கள்.

மறுப்பு

"30—11—68-ம் நாள் 'தினமலர்' இதழில், சிவகாசி தி.மு.க. கலைக்கப்பட்டதாக வந்த செய்தி ஆதாரமற்றது. தோழர் துரைக் கண்ணன் நகரச் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

"மேலும், கழகத்தைக் கலைப்பதற்கு கழகப் பொதுச்செயலாளருக்குத்தான் அதிகாரமுண்டு. தவறான செய்தி கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்டக் கழகம் முயற்சி எடுத்திருக்கிறது"

என்று, இராமநாதபுர மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிக்கிறார்.

தி. மா. மு. க. தோழர்கட்கு பொதுச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை, நவ. 30—

திராவிட மாணவ முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. பின்வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் :—

"மாநிலமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகளை உடனடியாகப் புதுப்பிப்பதுடன், கிளைகள் இல்லாத கல்வி நிலையங்களில் புதிதாக அமைக்குமாறும் ஆங்காங்கு உள்ள நமது மாணவ நண்பர்களை வேண்டுகிறேன்.

"உறுப்பினர்களைச் சேர்த்து முறைப்படி தேர்தலை நடத்தித் தலைமைக் கழகத்திற்கு 31—12—68-க்குள் அனுப்ப வேண்டுகிறேன்.

"கூடியவரை கிளைக் கழகச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் போன்ற பொறுப்பேற்கும் நிர்வாகிகள், இறுதி ஆண்டில் பயிலுபவராக இல்லாமல் இருக்க வேண்டும்.

"உறுப்பினர் பதிவுத் தாள் வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். டி. சோமசுந்தரம், பொதுச் செயலாளர், திராவிட மாணவ முன்னேற்றக் கழகம், 12, முதல் தெரு, நந்தனம், சென்னை-35.

அரசு ஊழியர்கட்கு வேண்டுகோள்

"நாட்டையும் நம்மையும் பாதுகாத்த முன்னாள் இராணுவ வீரர்களின் நல்வாழ்விற்கு நிதி திரட்டும் நாளாகும் -- டிசம்பர் 7-ஆம் நாள்.

"அரசின் வேண்டுகோளுக்கு ஏற்ப இந்நிதி திரட்டும் பணியில் கலந்துகொண்டு, நிதி திரட்டும் பணிக்கு ஒத்துழைப்பதோடு, கணிசமான நிதியினையும் ஒவ்வோர் அரசு ஊழியரும் தங்கள் பங்காகச் செலுத்த விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்; என்.ஜி.ஜி.ஓ. சங்க மாவட்ட நிர்வாகிகள் தக்க ஒத்துழைப்புக் கொடுத்துதவ வேண்டுகிறேன்"

என, தமிழக அரசிதழ் பதிவு பெருத அரசு ஊழியர் சங்கத் தலைவர் வி. தேவநாதன் அறிவிக்கிறார்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

கள்ளக் கடத்தலைக் கண்டுபிடிப்போருக்குப் பரிசு

தமிழக அரசின் திட்டம்

திருச்சி, டிச. 2—

உணவுத் தானியங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கவும், மாவட்டங்களிடையே உள்ள சோதனைச் சாவடிகளின் பணியைத் தீவிரப்படுத்தவும், தமிழக அரசு ஒரு ரொக்கப் பரிசுத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறது.

சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் உணவுப் பொருள் வழங்குதுறை ஊழியர்கள் அபாயத்திற்கு அஞ்சாமல் கள்ளக்கடத்தல் பேர்வழிகளைப் பிடிப்பார்களானால், அவர்களுக்கு இத்திட்டப்படி ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படும்.

முதலில் ஆறு மாத காலத்திற்கு இத்திட்டத்தை, பரீட்சார்த்தமான முறையில் செயல்படுத்துவது என அரசு முடிவுசெய்திருக்கிறது.

உணவு வழங்கு துறையில் தாசில்தார் நிலைக்கு மேற்படாத செளகிதார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் முதலிய ஊழியர்கள் ரொக்கப் பரிசு பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்.

காவல்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள், தலைமைக் கான்ஸ்டபிள் ஆகியவர்கள் சோதனைச் சாவடிகளில் பணியாற்றுகிறார்கள் அல்லவா—அவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் ரொக்கப் பரிசு அளிக்கப்படாது; அவர்களுக்கு ரொக்கப் பரிசு அளிப்பதற்கான ஒரு திட்டம் போலீசு இலாகாவில் உள்ளது.

மாவட்ட உணவுப் பொருள் வழங்குதுறை அதிகாரி, மாவட்ட கலெக்டர், சிவில் சப்ளை கமிஷனர் ஆகியவர்களுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கும் அதிகாரம் உள்ளது; அரசுக்கும் இந்த அதிகாரம் உண்டு.

ஒரு குறிப்பிட்ட ஊழியருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் அளிக்கக்கூடிய அதிகபட்ச ரொக்கப் பரிசும், அதை அளிப்பதற்கான அதிகாரமுள்ள அதிகாரியும் வருமாறு :—

மாவட்ட உணவு வழங்குதுறை அதிகாரி :— ரூ. 5; மாவட்டக் கலெக்டர் :— ரூ. 150; உணவு வழங்குதுறை கமிஷனர் :— ரூ. 250; அரசு :—ரூ. 250-க்குமேல்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு செய்து வருகிறேன். இந்த ஏற்பாட்டின்படி, பயிரிடப்படுகின்ற செடிகளைப் பாதுகாப்பதில் -- உங்கள் கால்நடைகள் ருசி பார்த்துவிடாமல் காப்பாற்றுவதில் -- நீங்கள் உங்களை ஈடுபடுத்திக்கொள்வது, நகரை அழகுபடுத்தும் முயற்சியில் இரண்டாவது படியாகும்.

உங்கள் வீட்டின் முன்புறத் திறந்த வெளியில் சிறு பந்தலிட்டு -- பற்றிப் படரும் கொடிகளைப் பயிரிட்டு -- சாலை ஓரங்களில் பச்சை நிறம் பரப்புவது நகரை அழகுபடுத்தும் முயற்சியில் மூன்றாவது படியாகும்.

உங்கள் வீட்டில் சேரும் குப்பைகளைத் தெருவிலுள்ள குப்பைத் தொட்டிக்குள்ளேயே கொட்ட வேண்டும். காற்றடித்து அவை தெருவெல்லாம் சிதறாமல் இருக்க மாநகராட்சி துப்புரவு வண்டி வருவதற்கு முன்னதாகவே குப்பைகளைத் தொட்டியில் சேர்த்துவிட்டால், அவை உடனே அகற்றப்படும். சாலைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் அழகின்பாற்படும். சுத்தமும், அழகும் எப்போதும் ஒருங்கிணைந்தால்தான் மகிழ்ச்சியும், அமைதியும் பிறக்கும். எனவே, இது நகரை அழகுபடுத்துவதில் நான்காவது படியாகும்.

சாலை ஓரங்களிலும், மற்றப் பொது இடங்களிலும் நம் வீட்டுக் குழந்தைகளை அசுத்தம் செய்யவிடுவது அருவருக்கத்தக்கதாகும். அதோடு அல்லாது, நகரின் சுகாதாரத்தையே சீர்கேடாக்குவதாகும். நம் வீட்டையும், நம் உடைகளையும் எவ்வளவு நாகரீகமாக அமைத்துக்கொண்டாலும், இந்த ஒரு தீய பழக்கமே நம்மை நாகரீகமற்றவர்கள் என்று நிரூபித்துவிடும். நகரின் அழகு அதன் சுத்தத்திலும் பரிணமிக்க வேண்டும். எனவே, சாலை ஓரங்களிலும், பொது இடங்களிலும், நம் குழந்தைகள் அசுத்தம் செய்யாமல் நாம் பார்த்துக்கொள்வது நகரை அழகுபடுத்துவதில் ஐந்தாவது படியாகும்.

நம் நகரில் அழகும், சுத்தமும் ஒருங்கே திகழச் செய்வதில் உங்கள் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு; காரணம், இது உங்கள் நகரம்.

நான் குறிப்பிட்ட இவ்வைந்து படிகளும் கடைபிடிக்க எளியவை; இவற்றால், உங்களுக்குச் செலவும் இல்லை; ஆனால் பயனோ மிக அதிகம்.

இந்த ஐந்து எளிய முறைகளையும் நீங்கள் நடைமுறைப்படுத்தினால் மெரினா கடற்கரையை எழில்படுத்துவது -- கூவம் ஆறு, பகிங்காம் கால்வாய் ஆகியவற்றைச் சுத்தம் செய்வது -- ஆகிய பெரும் பணிகளைப் பொதுப் பணித் துறை பார்த்துக்கொள்ளும்.

தமிழ்நாட்டின் தலைநகராம் இச்சென்னை நகரில் வாழும் நீங்கள் நல்ல நாகரிகம் படைத்தவர்கள்; கலை நுகர்ச்சியில் வல்லவர்கள்; அழகின் ரசிகர்கள்; எனவே, 'நம் நகரை அழகுபடுத்துவோம் வாரீர்' என்று உங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்; அதனை அன்புடன் ஏற்று ஆர்வத்துடன் ஒத்துழைக்க வேண்டுகின்றேன்.

அமைச்சர்

மு. கருணாநிதி பம்பாய் பயணம்

பாரதி விழாவில் பங்கேற்பு

சென்னை, டிச. 3—

தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள், 7—12—68 பிற்பகல் 2-30 மணிகுகு விமான மூலம் பம்பாய்க்குப் புறப்படுகிறார்; அன்றும், மறு நாளும் பம்பாயில் நடக்கும் பாரதி விழாவில் கலந்துகொள்கிறார்; 9—12—68 காலை 8-20 மணிக்கு விமான மூலம் சென்னை வந்து சேருகிறார்.

பம்பாய்

தி. மு. க. தோழர்கட்கு மத்தியக் குழுச் செயலாளர் வேண்டுகோள்

"பம்பாய் மாதுங்கா பகுதியில் நடைபெறவிருக்கும் பாரதி விழாவில் பங்கு கொள்ளத் தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி அவர்களும் 7-12-68-ம் நாள் மாலை 4-20 மணிக்கு விமானம் மூலம் பம்பாய் சாந்தாகுரூஸ் வந்து சேருகிறார்கள். அங்கு அமைச்சர்களுக்குச் சிறப்பான வரவேற்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வரவேற்பு விழாவில் பம்பாய் தி.மு.க.—துணை மன்றத் தோழர்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டு சிறப்பளிக்க மிகவும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்"

என, பம்பாய் தி.மு.க. செயலாளர் தொ.து. அன்புச்செழியன் அறிவிக்கிறார்.

பேராசிரியர்

க. அன்பழகன் வருகை

சென்னை தோழர்களுக்கு வேண்டுகோள்

"அயல்நாடு சென்று திரும்பும் பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. அவர்கள், 4—12—68 இரவு 9-மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேருகின்றார்; அதுபோது, சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் பேராசிரியர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். கழகத் தோழர்களனைவரும் வரவேற்பில் கலந்துகொண்டு, சிறப்பிக்க வேண்டுகின்றேன்"

என, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

தர்மபுரி மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

தர்மபுரி மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம் 5-12-65 காலை 10-30 மணிக்கு ஒகனேகல் பயணிகள் விடுதியில் நடைபெறும்; அதுபோது நகராட்சித் தேர்தல்--மாவட்டக் கழக நிதி--அண்ணா உருவச் சிலை அமைப்பு--மற்றும் கழக வளர்ச்சி தொடர்பாக ஆலோசிக்கப்படும்"

என்று மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன் அறிவிக்கிறார்.

ஐம்பதாண்டுகட்குமுன் பாரதி கண்ட கனவு

இன்றுநனவாக்கினார்அறிஞர்அண்ணா

வரலாற்றுச் சிறப்புக்குரிய 'தமிழ்நாடு'— அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

திருச்சி, டிச. 3 —

"வீரர்களையும் அறிஞர்களையும் தோற்றுவித்த இந்த மண்ணுக்கு, இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த இருளை நீக்கி—மீண்டும் தமிழகத்தின் புகழ் உலகெல்லாம் பரவ, தமிழ்நாடு என்று பெயர் சூட்டி இருக்கிறோம்!

"இங்குள்ள சிலர், 'தமிழ்நாடு' என்று ஏன் பெயர் வைக்க வேண்டும்? அப்படி வைப்பதால் என்ன வந்துவிடும்?" என்று கேட்கிறார்கள்!

"பெயர் மாற்றத்தில்தான் அனைத்துமே இருக்கிறது; நாட்டின் பெருமை, புகழ் இருக்கிறது!

"ஜயங்கொண்ட சோழபுரம், கங்கைகொண்ட சோழபுரம், முடிகொண்டான் போன்ற பெயர்கள் எல்லாம் காரணப் பெயர்களாக வந்தவைகள்தான். 'ஸ்டாலின் கிராடு'—'லெனின் கிராடு' போன்றவைகளும் காரணப் பெயர்கள்தான்! அப்படியெல்லாம் இருக்கையில், தமிழர்கள் வாழும் பகுதிக்குத் 'தமிழ்நாடு' என்று ஏன் பெயர் வைக்கக் கூடாது?

"எது அழிந்தாலும் புதுப்பித்துக்கொள்ளலாம்; ஆனால், மொழியின் பெருமை அழிந்தால் புதுப்பித்துக்கொள்ள முடியாது!"

இவ்வாறு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருவரங்கம் சாத்தார வீதியில் நடைபெற்ற 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினக்கினார்.

"இனிமேல், உலக அரங்கில் 'தமிழ்நாடு' என்ற பெயர் தான் எழுத்தளவிலும், சொல் அளவிலும் நடைமுறைக்கு வரும்.

'மெட்ராஸ் ஸ்டேட்' என்று அவர்கள் அழைக்கமாட்டார்கள்; தமிழர்கள் வாழும் பகுதி தமிழ்நாடு என்ற காரணப் பெயரில் இருப்பதில் என்ன தவறு?

50 ஆண்டுகளுக்கு முன்பே, செந்தமிழ்நாடு என்னும் போதினிலே—இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்றுதானே பாரதி பாடினார்?

பாரதி அன்று கண்ட கனவை 50 ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணா நிறைவேற்றிவிட்டார்! இந்தப் பெருமை அண்ணாவையே சாரும்!"

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல்

தொகுதிகள் பிரித்தமைப்பு

புதுச்சேரி, டிச. 3—

புதுவை மாநில சட்டமன்றத் தேர்தல் 1969 பிப்ரவரி 9-ம் நாள் நடைபெறும்.

சட்டமன்றத் தொகுதிகள் 30-ஆகப் பிரிக்கப்பட்டு அரசிதழில் விபரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

புதுச்சேரி பகுதி 20 தொகுதிகளாகவும், காரைக்கால் பகுதி 7 தொகுதிகளாகவும், மாகி பகுதி 2 தொகுதிகளாகவும், ஏனும் பகுதி 1 தொதியாகவும்—ஆக 30 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தற்போது, சட்டமன்றம் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சி 1969 மார்ச்சில் முடிவடைகிறது.

பிப்ரவரியில் தேர்தல் முடிந்ததும், புதிய அமைச்சரவை மார்ச்சுககுள் நிறுவப்படலாம்.

சட்டமன்றத் தேர்தலுக்கான வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன.

கருநாடக அரசின் பரிசுச் சீட்டு

பெங்களூர், டிச. 3—

"மைசூர் அரசு நடத்த எண்ணியுள்ள பரிசுச் சீட்டுத் திட்டம் இதர மாநிலங்களின் பரிசுச் சீட்டுத் திட்டங்களைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கும்"

என்று நிதியமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே நிருபர்களிடம் தெரிவித்தார்.

"எந்த அடிப்படையில் இவ்வாறு கூறுகிறீர்கள்?" எனக் கேட்டதற்கு, 'பரிசுச் சீட்டு நடத்தும் விதம்—பரிசுத் தொகை—அரசுக்குக் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றில் இது சிறந்ததாக இருக்கும்' என்று அமைச்சர் பதிலளித்தார்.

திட்டம் முழுவதும் தயார் என்றும், உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யோசனை சொன்னவரே எதிர்க்கும் விசித்திரம்!

பரிசுச் சீட்டால் வரும் தீங்கு என்ன?

கரூரில் அமைச்சர் மா. முத்துசாமி வினா

கரூர், டிச. 3—

கரூர் இராசலிங்கம் மன்றத்தில், 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது; விழாவில் கலந்துகொண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் காங்கிரசார் குறைகூறிப் பேசுகின்றனர்; 'இந்தத் திட்டத்தால் நாடே இடுகாடாகிவிட்டது' என்கிறார்கள்.

"தமிழகத்தில் மட்டுந்தானா பரிசுச் சீட்டுத் திட்டம் நடத்தப்படுகிறது? கேரளத்தில் இல்லையா? அரியானாவில்—வங்கத்தில் இல்லையா? இதைக் காங்கிரசார் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம்கூடப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை எதிர்க்கிறார்; ஆனால் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் நிதியமைச்சராக இருந்தபோது, 'அனைத்திந்திய அடிப்படையில் பரிசுச் சீட்டுத் திட்டம் நடத்தவேண்டும்' என்று யோசனை சொன்னவர் அவர்தான்!

"அவரவர்கள் தங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டுப் பரிசுச் சீட்டு வாங்குவதால் தானா நாட்டிற்கு நஷ்டமும் கஷ்டமும் வந்துவிடப்போகிறது? பரிசுச் சீட்டு வாங்கும்படி யாரையும் நாம் வற்புறுத்துவதில்லையே!

"சினிமாவுக்குப் போவதைக் குறைத்து-பலமுறைகாபி அருந்துவதைக் கட்டுப்படுத்தி—பட்டுப் புடவைகள் வாங்குவதைத் தவிர்த்து—அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்ற ஆதரவு தரும் வகையில் பரிசுச் சீட்டுகளை வாங்குகிறார்கள்; இதில் தவறு ஒன்றுமில்லையே!

"ஏழைகள் இலட்சாதிபதிகளாக ஆவதைப் பார்த்துக் காங்கிரசாருக்குப் பொறுக்கவில்லை; அதனால்—பொருமையினால் குறை சொல்லுகிறார்கள்.

"பரிசுச் சீட்டு வாங்குவதன்மூலம் அரசுத் திட்டங்களுக்கு மக்கள் தரும் ஆதரவைக் கண்டு, காங்கிரசார் ஏன் துடியாய்த் துடிக்க வேண்டும்?"

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப உடன் நிதியளித்த தோழர்கள்: —

	ரூ. காசு
இரா. நெடுஞ்செழியன்	500.00
மு. கருணாநிதி	500.00
என். வி. நடராசன் எம்.எல்.சி.	101.00
'முரசொலி' இதழின் சார்பாக— தோழர் செல்வம் அவர்கள் மூலம்	500.00
'முத்தாரம்' இதழ் சார்பாக	555.00
'மறவன் மடல்' நாளிதழ் சார்பாக	101.00
'மாலை மணி' நாளிதழ் சார்பாக—தோழர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, பி. எஸ். இளங்கோ ஆகியோர் மூலம்	1001.00
சென்னை பார்க்பேர் பொருட்காட்சி சார்பாக அமைப்பாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் மூலம்	501.00
'நம் நாடு' இதழ் அலுவலக ஊழியர்கள் சார்பாக	51.00
சென்னை 8-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் தோழர் இரா. மு. மனோகரன்	25.00
சென்னை—இராயபுரம் அண்ணா நற்பணி மன்றம் சார்பாக செயலாளர் கே. பாலு	5.00

நடக்க இருப்பவை

4—12—68

மாநெல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு கோதண்டராமசாமி கோயில் அருகில்; தலைவர்: கோபாலகிருஷ்ணையா; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், புலவர் பொன்னிவளவன், கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., ஆ. கிருஷ்ணன், மு. கேசவன்.

சின்னமனூர்

நகர தி. மு. க.—எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு சங்கிலியார் திடலில்; தலைவர்: கே நூர்முகம்மது; பேசுவோர்: சி. தமிழரசி, எம். இரத்தினம், மு. சோமசுந்தரம், இரா. சௌந்திரபாண்டியன், என். எஸ். முனியப்பன்.

பெரியபாளையம் துணை மின் நிலையத் திறப்பு விழா

பெரியபாளையம் துணை மின் நிலையத் துவக்க விழா 4-12-68 மாலை 3-மணிக்கு தமிழக மின்வாரியத் தலைமைப் பொறியர் திரு. கே. எஸ். துரைசாமி தலைமையில் நடைபெறும்; கல்வி—தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைப்பார்; விழாவில் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கா. வேழவேந்தனும் கலந்து கொள்வார்.

தமிழக மின்சார வாரியம்

K 2-ஒப்பந்தம்

குறிப்பு எண் SCE. 105

முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் அதன் உறையில் 'தமிழக மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்—நீர் இறைக்கும் யந்திரக் கட்டிடத்திலிருந்து முதல் மின் உற்பத்தி யந்திரம் வரை குளிர வைககும் தண்ணீரை உள் செலுத்தும் குழாய்களுக்கான பள்ளத்துக்குக் கட்டுமான வேலைகள் செய்தல்' எனவும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 27—12—68 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். டெண்டர்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

டெண்டர் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

இந்த வேலைக்கான பிணைத் தொகை ரூ. 5000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ரொக்கமாகக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதை டெண்டருடன் இணைக்க வேண்டும்.

துறையினரைச் சார்ந்த நமூனாக்களில் இல்லாத டெண்டர்களும், இறுதித் தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் டெண்டர்களும் நிராகரிக்கப்படும். டெண்டர்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது யாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் தவறிப்போகும் டெண்டர் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. டெண்டர் பத்திரங்கள் மாற்றத்தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.